# Forum of BSNL Unions and Associations

## தமிழ் மாநிலம்

**தலைவர்: R.பட்டாபிராமன்** **கன்வீனர்: S.செல்லப்பா**

# பெருந்திரள் பட்டினிப்போர்.. 29.04.2015 அன்று CGM அலுவலகம் முன்பு

# இயக்க மாண்பை காப்போம்..

**அன்புமிக்க தோழர்களே,**

ஏப்ரல் 21,22 வேலை நிறுத்தம் தமிழகத்தில் அனைத்து மாவட்டங்களிலும் மிகவும் சிறப்பாக எழுச்சியுடன் நடைபெற்றுள்ளது. இந்த வேலை நிறுத்த வெற்றியை தடுப்பதற்கும், திசை திருப்புவதற்கும் சீர்குலைவு வேலைகளை R.அமுதவாணன் (CGM அலுவலகம்) செய்து வருகிறார். இந்த 2 நாட்கள் நடைபெற்ற வேலை நிறுத்தத்திலும் நமது தோழர்களை தரக்குறைவாக விமர்சிப்பதும், ஏதாவது ஒரு வகையில் முரண்பாட்டினை உருவாக்கும் முயற்சியில் தொடர்ந்து ஈடுபட்டார். நமது தோழர்கள் பெரும் சகிப்புதன்மையுடன் பொறுமை காத்தனர்.

நமது மரியாதைக்குரிய Forum கன்வீனர் S.செல்லப்பா Forum தலைவர் R.பட்டாபிராமன் உள்ளிட்ட ஐந்து பேர் மீது காவல்துறையில் தன்னைத் தாக்கியதாக பொய்புகார் கொடுத்துள்ளார். அதே போன்று இதே பொய்ப்புகாரை நிர்வாகத்திடம் கொடுத்ததோடு மட்டுமன்றி தொழிற்சங்க தலைவர்கள் மீது Suspension உள்ளிட்ட நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் வற்புறுத்தி வருகிறார்.

வேலை நிறுத்தத்தை வெற்றிகரமாக்கிட உழைத்திட்ட Forum தலைவர்கள் மீது காழ்ப்புணர்ச்சியோடும், பழிவாங்கும் உணர்வோடும், வேலை நிறுத்த்தை உடைக்கவேண்டும் என்று கங்கணம் கட்டிக்கொண்டு வேலை பார்த்த அமுதவாணனின் செயல்களுக்கு முற்றுப்புள்ளி வைப்பது நமது இயக்க கடமையாகும். காவல் துறையிடமும் நிர்வாகத்திடமும் நமது நிலையை தெளிவுபட எடுத்துக்கூறியுள்ளோம். இந்த புகார் பொய்ப்புகார் என்பதை ஆணித்தரமாக எடுத்துரைத்துள்ளோம்.

தமிழக Forum சார்பாக தலைமைப் பொதுமேலாளரிடம் அமுதவாணனின் தகாத செயல்களை பட்டியலிட்டு தலையீடு கோரி எழுத்துப்பூர்வமாக 21.04.2015 அன்று அனைத்து மாநிலச் செயலர்களும் சென்று கடிதம் கொடுத்துள்ளனர். ஆனால் மாநில நிர்வாகத்திடமிருந்து உரிய நடவடிக்கை எதுவும் இதுவரை இல்லை. எனவே நியாயமான நடவடிக்கையை மாநில நிர்வாகம் எடுக்க வலியுறுத்தி

29.04.2015 அன்று பெருந்திரள் பட்டினிப்போர் சென்னை CGM அலுவலகம் முன்பு காலை 10 மணிக்கு துவங்கும்.

பெருந்திரளாக பங்கேற்பீர்..

தோழமையுடன்

| | | |
|---|---|---|
| R.பட்டாபிராமன்<br>President Forum & CS NFTE | S. செல்லப்பா<br>Convener, Forum | A.பாபு ராதாகிருஷ்ணன்<br>CS, BSNLEU |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| M.Gopinathan<br>CS,SNEA(I) | S.Sivakumar.<br>CS,AIBSNLEA | K.Rajasekaran<br>CS, AIBSNLOA | P.Alagupandiyaraja<br>CS, SNATTA | T.Senthilkumar<br>CS, TSOA | R.Chandrasekar<br>Dy. CS, SEWABSNL |